உள்நாட்டு இறைவரித் திணைக்களம்

# பெறுமதி சேர் வரியினைப் பதிவு செய்து கொண்ட ஆட்களுக்கான அறிவித்தல்

**உள்நாட்டு இறைவரித் திணைக்களமானது, உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் இணையத்தளத்தினூடான இலத்திரனியல் சேவைகளின் கீழ், பெறுமதி சேர் வரிக்கான (பெசேவ) மின் கோவையிடல் முறைமையினை அறிமுகப்படுத்தியுள்ளது.**

பெறுமதி சேர் வரிக்கான விபரத்திரட்டு மற்றும் அட்டவணைகளினைச் சமர்ப்பிக்கும் போது பின்வரும் விடயங்களினைக் கவனத்தில் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

- விபரத்திரட்டுக்களினைக் கோவையிடுவதற்கான மின் கோவையிடல் வசதிகளினை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் இணையத் தளத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம். (www.ird.gov.lk)
- மின் கோவையிடலுக்கான வழிகாட்டுதல்கள் மற்றும் அட்டவணைகள் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திலுள்ளன.
- நீங்கள் ஒரு கம்பனியாயின், மின் கோவையிடல் நோக்கத்திற்காக தங்களின் பதவியணியினர் பயன்படுத்துவதற்கு உரித்தரவளிக்கும் மற்றும் அவர்களுக்கு உள் நுழைவதற்கான அதிகாரத்தினை அளிக்கும் வகையிலுமான விசேட பதவியினர் இனங்காட்டுனர் (SSID) பட்டியலுடன் கூடிய கடிதமொன்றினை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திடமிருந்து பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். எவ்வாறாயினும், நீங்கள் அத்தகைய வசதியினை இதுவரை பெற்றிருக்காவிடின், உள்நாட்டு இறைவரித் திணைக்களத் தலைமையகத்திலுள்ள வரி சேவைப் பிரிவிலிருந்து அல்லது உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் இணைய நுழைவாயிலில் கிடைக்கக்கூடிய இ-சேவைகளினூடாகவும் அத்தகைய சேவையினைப் பெற்றுக் கொள்ளலாம்.
- பெறுமதி சேர் விபரத்திரட்டிற்கான அட்டவணையினைச் சமர்ப்பிப்பது **கட்டாயமானதாகும்**. இல்லையெனில், வரிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக பெறுமதி சேர் விபரத்திரட்டு ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.
- தங்களின் பெறுமதி சேர் அட்டவணையிலுள்ள பதிவுகளின் எண்ணிக்கை 20 இற்கும் அதிகமெனில், நீங்கள் தங்களின் அட்டவணைகளினை மின் கோவையிடலினூடாக மட்டுமே சமர்ப்பித்தல் வேண்டும். நேரடியாக சமர்ப்பித்தல் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

  இருந்தபோதிலும், தங்களின் பெறுமதி சேர் வரி அட்டவணையிலுள்ள பதிவுகளின் எண்ணிக்கை 20 இலும் குறைவு எனில், தங்களின் அட்டவணையினை நேரடியாகவோ அல்லது மின்கோவையிடல் மூலமாகவோ சமர்ப்பிக்கலாம். எவ்வாறாயினும், அனைத்து வரி செலுத்துனர்களும் வினைத்திறன் நோக்கத்திற்காக மின்கோவையிடல் வசதியினை பயன்படுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.
- பெறுமதி சேர் வரிக்கான இலத்திரனியல் சேவைகளுக்கான உதவுகையானது, உள்நாட்டு இறைவரித் திணைக்கள தலைமை அலுவலகத்தின் நிலத்தளத்தில் வழங்கப்பட்டு வருகின்றது.
  தயவு செய்து விரைவாக கோவையிட்டு நெருக்கடியினைத் தவிர்க்கவும்.

**மேலதிக விபரங்களுக்கு தயவுசெய்து 1944 எனும் இலக்கத்தினை அழைப்பதனூடாக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் அழைப்பு நிலையத்துடன் தொடர்பு கொள்ளவும்**

**உள்நாட்டு இறைவரி இணையத்தளம் : www.ird.gov.lk**

**உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம்**

வரி - சிறந்ததொரு எதிர்காலத்திற்காக